REGD. NO. M.:6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 15உ செவ்வாய் (28—5—57) ★ ★ வெளியூர்: வைகாசி 16உ புதன் (29—5—57) இதழ் [299

டாடா நிறுவனத்திற்கு 98 இலட்சம் டாலர்!

உலக பாங்கியிலிருந்து டில்லி சர்க்கார் கடனாக வாங்கித்தரும்

நியூயார்க், மே 26—

பம்பாய் அருகே டிராம்பேயில் டாடா நிறுவும் தெர்மல் நிலையத்திற்கு உலக பாங்கி 98 இலட்சம் டாலர் கடன் வழங்கும் என்றும், இதற்கான ஒப்பந்தம் ஒன்றில் வரும் புதன்கிழமையன்று டில்லி சர்க்கார் கையொப்பமிடும் என்றும் தெரியவருகிறது.

வட நாட்டின் தொழில் வளம் மேலும் பெருக டில்லி மேற்கொள்ளும் திட்டங்கள்

ரூ. 40 கோடி செலவில் உ. பி. மாநிலத்தில் இரு தொழிற்சாலைகள்

எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் செயற்கை இரப்பர் உற்பத்திக்கு ஆலையாம்!

அலுமினியத் தொழிற்சாலையும் அங்குதானும்!

நிறுவ உத்தேசிக்கப்பட்டிருந்த செயற்கை இரப்பர் உற்பத்தித் தொழிற்சாலைக்கு தென்னாட்டு (இயற்கை) இரப்பர் உற்பத்தி சங்கத்தவர் பலத்த கண்டனம் தெரிவித்திருந்தும், வடநாட்டை மேலும் தொழில் வளமுள்ளதாக்கும் நோக்குடன் டெல்லி பேரரசினர், உத்திரப் பிரதேச மாநிலத்தில் அத்தொழிற்சாலையை நிறுவுவதென முடிவு செய்திருக்கிறார்களாம்!

அத்துடன், உ. பி. மாநிலத்தில் ஒரு அலுமினியத் தொழிற்சாலையும் நிறுவப்போகிறார்களாம்!

இந்த இரு தொழிற்சாலைகளும் இரண்டாம் திட்ட காலத்திற்குள்ளாகவே நிறுவப்பட்டுவிடுமாம்!

இதற்காக ரூ. 40 கோடிவரை செலவிடப்படுமாம்!

இந்தத் தகவல்களை, மத்திய தொழில் மந்திரி எம். எம். ஷா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

பஞ்சசீலர்களின் 'டயர் வெறி' தணிகிறது?

உதகை, மே 27—

"மதுவிலக்குக் குற்றங்களை ஒரு சவாலாக ஏற்று அவற்றை ஒழிப்பதற்குப் போலீசார் பாடுபட வேண்டும்" என்று போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்துள்ளார்.

சட்ட விரோதமான கூட்டங்களைக் கலைக்கக் கண்ணீர்ப் புகையை அதிகம் பயன்படுத்தவும், துப்பாக்கிப் பிரயோகத்தைக் குறைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆயுதப் போலீசுப் படையினருக்குத் தடிக்குப் பதிலாக பிரம்பு தரவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வரிகள் அவசியத்தை விளக்க போகிறார்களாம்!

காமராசர் தகவல் தருகிறார்

சென்னை, மே 27—

புதிய வரிகள் எல்லோரையும் பாதிக்காதாம்! உண்மையான ஏழைகளை இந்த வரிகள் பாதிக்கவில்லையாம்!

நாடே கொதித்தெழுந்துள்ள இந்த நேரத்தில் வரிவிதிப்பு அவசியத்தை வேறு மக்களிடம் காங்கிரஸ் வலியுறுத்த இனிமேல் திட்டம் தீட்டி செயல்படுமாம்!

இந்தத்தகவலை, டில்லி சென்று சென்னை திரும்பிய காமராசர் கூறியுள்ளார்.

அமெரிக்கரைத் திருப்திப்படுத்த 70 பேர் கைது

தைபே, மே 27—

கடந்த வெள்ளிக்கிழமையன்று அமெரிக்கருக்கு எதிராக நடைபெற்ற கலகத்திற்கு தேசிய சீனாவின் தலைவர் சியாங்-கே-ஷேக் வருத்தம் தெரிவித்துக் கொண்டு அமெரிக்கத் தலைவர் ஐசனோவருக்கு மன்னிப்பு மடல் வரைந்துள்ளார்.

அமெரிக்காவின் உறவு சீர்குலையாது நிலைபெறச் செய்ய, கலகத்தின் தலைவர்கள் என்று குற்றம் சாட்டி மொத்தம் 70 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பம்பாய் நகரசபையில் காங்கிரஸ் ஆதிக்கத்திற்குச் சீட்டு

மராட்டிய சமிதி அபேட்சகர் நகரசபைத் தலைவராகத் தேர்வு

பம்பாய், மே 27—

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக, காங்கிரசல்லாத ஒருவர் பம்பாய் நகர மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

சம்யுக்த மராட்டிய சமிதியைச் சேர்ந்த எம். வி. டோண்டே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தலால் என்ற காங்கிரஸ் அபேட்சகர் தோற்றிருக்கிறார்.

காங்கிரஸ் அபேட்சகருக்கு 54 - ஓட்டுகளும், சமிதி அபேட்சகருக்கு 77 ஓட்டுகளும் கிடைத்திருக்கின்றன.

'காங்கிரஸ் அபேட்சகர் தோற்றார்-சமிதி அபேட்சகர் வெற்றி பெற்றார்' என்ற அறிவிப்பு, நகரசபை மண்டபத்தின் உள்ளும் புறமும் கூடியிருந்த ஆயிரக்கணக்கானவர்களால் பெரும் ஆரவாரப் பேரொலியுடன் வரவேற்கப்பட்டிருக்கிறது.

மக்கள் தந்த பல இலட்சம் ரூபாய் நஷ்டம்!

தபால்-தந்தி இலாகா ஊழல்கள்

தணிக்கைக் குழு அறிக்கை அம்பலப்படுத்துகிறது

புதுடில்லி, மே 28—

இலட்சக் கணக்கான ரூபாய்—மக்கள் தந்த பணம், தபால்—தந்தி இலாகாவில் மலிந்து வரும் ஊழலினால் பாழாகிவிட்டிருப்பதாக இந்த இலாகாவின் கணக்குத் தணிக்கை அறிக்கை கூறியிருக்கிறது.

மக்கள் சபையில் தாக்கலாகியுள்ள 1955-56ம் ஆண்டுக்கான அந்த அறிக்கையில் காணப்படுவதாவது :—

இந்த ஆண்டில், தபால்-தந்தி இலாகாவுக்குச் சொந்தமான செப்புக் கம்பிகள் திருட்டுப் போனதின் விளைவாக ரூ. 9·03 லட்சம் நஷ்டம் ஏற்பட்டதாம்!

இதுவும் சேர்த்து, மொத்தமாக பல சாமான்கள் திருட்டுப் போனதால் இலாகாவுக்கு இந்த ஆண்டில் மட்டும் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 10·65 இலட்சமாம்!

காரணம் யார் ?

இத்த நஷ்டங்களில் பெரும் பகுதிக்குப் பொறுப்பானவர்கள் கடந்த காலத்தைப் போலவே, இலாகா ஊழியர்கள்தாம், என்றும் அறிக்கை கூறுகிறது.

இந்த நஷ்டங்களுக்குக் காரணமானவர்கள் யார் என்பதை நிர்ணயம் செய்ய வேண்டிய சம்பவங்கள் இன்னும் 274 பாக்கியிருக்கிறதாம்!

இன்னும் ரூ. 10·63 கோடி ரூபாய்க்கான கணக்குத் தகராறுகள் பதில் சொல்லப்படாமல் கிளை தணிக்கை அலுவலகங்களில் தூங்கிக் கொண்டிருக்கின்றனவாம்!

1946-47ம் ஆண்டுக் கணக்கைச் சேர்ந்த ரூ. 75·15 இலட்சம் வரை இன்னும் வசூலாகமல் இருக்கிறதாம்!

தென் பகுதி இரயில்வே அபிவிருத்தித் திட்டம்

ரூ. 4¾ கோடி மட்டுமே ஒதுக்கப்படுகிறது

புதுடில்லி, மே 27—

தென் பகுதி இரயில்வேயில் இரயில் பாதையை இரட்டிப்பதற்கு இரயில்வே நிறுவனம் ரூ. 4,65,00,000 வரை ஒதுக்கியுள்ளதாம்.

உலவப்பாடு முதல் சூரரெட்டிப் பாளையம் வரையிலும்; கடவக்குருே முதல் பாபட்லா வரையிலும்; முகுந்தராயபுரம் முதல் லட்டேரி வரையிலும்; விண்ணமங்கலம் முதல் திருப்பத்தூர் வரையிலும்; அரக்கோணம் முதல் சித்தேர் வரையிலும்—ஆகமொத்தம் இந்த 5 இடங்களில் இரயில் பாதைகள் இரட்டிக்கப்படுகிறது.

இதற்குக் காரணம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தப் பகுதிகளில் அதிகப் போக்குவரத்து எதிர்பார்க்கப்படுகிறது என்பதேயாகுமாம்.

விடுதலைக் கிளர்ச்சிக்குத் துரோகமிழைத்தவர்

துப்பாக்கிக் குண்டினைப் பரிசாகப் பெற்றார்

பாரிஸ், மே 28—

அல்ஜீரியாவின் சுதந்திரக் கிளர்ச்சிக்கு விரோதமாக பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுடன் கூடிக் குலவிக்கொண்டிருந்த அல்ஜீரிய அரசியல்வாதி ஒருவருக்கு, துப்பாக்கிக்குண்டு ஒன்று பரிசாகத் தரப்பட்டிருக்கிறது.

அல்ஜீரிய சட்டசபையின் முன்னாள் உதவித் தலைவரான எம். செக்கல் என்பார், இங்குள்ள கொலம்பஸ் மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு பந்தயம் ஒன்றினை, பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர் கோட்டியுடன் உட்

(5-ம் கலம் பார்க்க)

விடுதலைக் கிளர்ச்சி...

(2-ம் கலத் தொடர்ச்சி)

கார்ந்து பார்த்துவிட்டு தனது காரில் ஏறிப் புறப்படும் சமயம், ஒரு வட ஆப்பிரிக்க வாலிபன், அவரை நோக்கிப் பாய்ந்து, கைத்துப்பாக்கியால் செக்கலின் முதுகு வழியாக ஒரு குண்டினைப் பாய்ச்சி, அவரைக் கொன்றிருக்கிறான்.

இதன் காரணமாக, சுமார் 600 பேர் வரை கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கின்றனர்.

செக்கலை கொலை செய்த வாலிபனும் பிடிபட்டான் என்று கூறப்படுகிறது.

பென்சதக் என்ற அந்த வாலிபன், போலீசாரிடம் தந்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"நான் எந்த அரசியல் கட்சியையும் சேர்ந்தவன் அல்ல; நான் எனது சுயசிந்தனையுடன்தான் இந்தக் காரியத்தைச் செய்தேன்.

"சில நாட்களுக்குமுன் பிரெஞ்சுக்காரருக்கு ஆதரவான ஒரு முகம்மதியரைக் கொல்வதென முடிவு செய்தேன். அதன்படி இந்த செக்கல் என்பவரைத் தேர்ந்தெடுத்தேன். ஏனென்னில் அவர்தான், பிரெஞ்சுக்காரருக்கு கடைசி முகம்மதிய நண்பராவார்."

இந்தச் செக்கல், அண்மையில் ஐ. நா. சபையில் அல்ஜீரியா பற்றிய விவாதம் நடைபெற்ற போது, பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் தூதுக்குழுவில் ஒருவராகச் சென்றிருந்தார்.

நம் நாடு

சென்னை 28—5—57 செவ்வாய்

கண்டன முழக்கம்!

நமது பொதுச்செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்க, தமிழ் நாடெங்கிலும் புது வரி விதிப்புக் கண்டன நாள், நேற்று முன்தினம் வெற்றிகரமாகவும் அமைதியாகவும் கொண்டாடப்பட்டிருக்கிறது.

பட்டி—தொட்டிகள், சிற்றூர்—பேரூர்கள், நகரங்கள்—பட்டினங்கள் இங்கெல்லாம் கழகத்தவர் ஊர்வலங்களும்—பொதுக்கூட்டங்களும் நடத்தி, கண்டன நாளைக் கொண்டாடியுள்ளனர்.

டில்லியின் புது வரி விதிப்புத் திட்டங்கள், அவதிக் கடலில் தத்தளித்துக்கொண்டிருக்கும் சாதாரண ஏழை—எளிய—நடுத்தர மக்களை, அந்த அவதிக் கடலின் ஆழத்தில் அமுக்கிவிடும் என்பதை நல்லறிவாளர் பலரும் எடுத்துரைத்திருக்கின்றனர்.

இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றில் வேறெப்போதும் இல்லாத வகையில், இந்த ஆண்டு வரிச் சுமைகளை ஒரே குவியலாக நாட்டு மக்கள் மீது சுமத்தத் திட்டமிட்டிருக்கின்றனர், டில்லிப் பெரியவர்கள்! இந்த அநியாயத்திற்கு எதிராக நாடெங்கிலும் கண்டனக் குரல்கள் வலுத்துவருகின்றன!

அறிவிக்கப்பட்டுள்ள புதிய வரி விதிப்புகளில் மிகப் பெரும்பாலானவை, ஏழை—எளியோரின் இன்றியமையாத் தேவைகளை அவர்களுக்குக் கிட்டாது செய்துவிடும் என்பதில் எவரும் சந்தேகம் தெரிவிக்கவில்லை. இப்படி, எளியோரை வாட்டிவதைக்க ஈவு இரக்கமின்றி முற்பட்டிருக்கும் டில்லிப் பேரரசு, புது வரி விதிப்பிற்குக் கற்பித்துள்ள நியாயம், குறிப்பாகத் தென்னாட்டு மக்களின் விசேடக் கவனத்திற்குறிய ஒன்றாகும்.

எந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதி திரட்டுவதற்கென இந்தப் புதுவரிகள் விதிக்கப்படுவதாகக்கூறி வரிவிதிப்புகளுக்கு நியாயம் கற்பிக்கிறார்களோ அந்த ஐந்தாண்டுத் திட்டங்களில், தென்னாடு பகிரங்கமாக வஞ்சிக்கப்பட்டிருப்பதை உலகு நன்கு அறியும். அவ்வாறு, இந்த நாட்டு மக்களுக்கு எவ்வித உருவான பலனும் அளிக்க ஏற்பாட்டில்லாத ஒரு திட்டத்திற்கு, இந்த நாட்டு ஏழை—எளிய மக்கள் தங்களது வாழ்வுக்கான அற்ப சொற்ப ஜீவனம்ச உபாயங்களையும் தியாகம் செய்ய வேண்டுமென்று டில்லிப் பெரியவர்கள் எதிர்பார்க்கிறார்கள், துணிவோடு. தங்களின் எண்ணத்தை வரவு-செலவுத் திட்டமாகவும் வெளியிட்டுள்ளார்கள்.

இந்த அக்கிரமத்தை, நமது பொதுச் செயலாளர் அவர்கள் 'தென்னாட்டு மக்களின் ஆத்திரத்தை வெளிப்படையாகத் தூண்டும் செயல்' எனக் கண்டித்திருக்கிறார்.

எனவே, இந்தப் புதிய வரி விதிப்புத் திட்டங்களை தென்னாட்டு மக்கள் எதிர்ப்பதற்கு, விசேடமான — வடநாட்டவருக்கு இல்லாத பிரத்தியேகமான காரணம் ஒன்றும் இருக்கிறது.

இந்தக் காரணங்களைக் காட்டித்தான் கழகம், டில்லியின் புது வரி விதிப்புத் திட்டங்களை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறது.

புத்தம் புதிய ஜனநாயகப் பாரம்பரியங்களை சிருஷ்டிக்க வேண்டுமென்பதில் தணியாத ஆர்வம் கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகம், இது போன்ற வரி விதிப்புத் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையிலும் புதியதோர் ஜனநாயக சம்பிரதாயத்தை உருவாக்க முனைந்துள்ளது.

வரி விதிப்புகள் கண்டு, மனம் குமுறும் மக்கள், விரிவான அளவில் கூடி, தங்கள் மனக் குமுறலை - எதிர்ப்பை உருவான வழியில் அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படுத்துவதே அந்த புதிய சம்பிரதாயமாகும். ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் கழகம், தன்னோடு மக்களையும் அழைத்துச் சென்றுதான் கோரிக்கைகளை வற்புறுத்தி வந்துள்ளது என்பதையும், அந்த ஜனநாயகச் சம்பிரதாயங்களைச் சிருஷ்டித்த பெருமையைப் பெற்றிருக்கிறது என்பதையும் இந்த நாடு நன்கு அறியும்.

அதன் தொடர்ச்சியாக, இந்த வரி விதிப்பிற்கு எதிரான குரல் கொடுக்கும்போதும், கழகம், மக்களில் பெரும்பாலானோரின் ஆதரவைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டுதான் வர விரும்புகிறது.

அந்த முயற்சியில் முதற்கட்டம்தான், கடந்த ஞாயிறன்று, நாடெங்கிலும் கழகம் நடத்திய வரி விதிப்புக் கண்டன முழக்க நாளாகும்.

நாட்டு மக்கள், தங்களுக்காகப் பரிந்து பேசவும், வாதாடவும், போராடவும் ஒரு இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது என்ற தங்களின் நம்பிக்கையை, அன்று உறுதி செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களது அந்த உறுதி வளர்வதில்தான் அவர்களது வாழ்வு அடங்கியிருக்கிறது என்பதை நாம் சொல்லத் தேவை இல்லை.

இந்த நிலையில், அன்று தி. மு. கழகத்தின் தலைமையில் அலைகடலெனத் திரண்டெழுந்து, புது வரி விதிப்புகளுக்குக் கண்டனம் முழக்கியுள்ள மக்களின் குரல், ஆட்சியாளரால் உரிய மதிப்பைப் பெறுமற்போனால், அந்த மக்கள் தங்களது கண்டன முறையை மாற்றிக்கொள்ள யோசிக்க வேண்டிவரும் என்று டில்லிப் பெரியவர்களை எச்சரிக்க விரும்புகிறோம்.

இலவசமாகப் பயன்படுத்தவில்லையாம்!

புகாருக்கு பண்டிதரின் பதில்

தேர்தலின்போது இந்திய விமானப் படையின் விமானத்தைத் தானும், தனது தோழர்

(4-ம் பக்கம் பார்க்க)

'தமிழுடன் பிற எழுத்துக்களை கலந்தால் தமிழின் மாண்பும்-மதிப்பும் குறைந்துவிடும்'

'ஆட்சி மொழிக் குழுவின் யோசனை தமிழ் வளர்ச்சிக்கு உதவுவதாக இல்லை'

"ஒரேவகைப்பட்ட மலர்களை வைத்துத் தொடுத்தால்தான், மாலையில் அழகைக் காண முடியும். மல்லிகைப் பூவைப் பயன்படுத்தும்போழுது மாலை முழுதும் மல்லிகைப் பூவாக இருந்தால் மாலையில் தனி மணமும், சிறப்பும் இருக்கும். மாலையைக் கதம்பமாக்கினால் விலை மலிவாவதுபோல, மதிப்பும் குறைந்துவிடும்.

"இதே மாதிரியாகத் தமிழ் மொழியில் பிற மொழி எழுத்துக்களைக் கலந்தால், தமிழின் மதிப்பும் மாண்பும் குன்றிவிடும். காலத்தால் அழியாத தமிழ் மொழியை, அதன் தன்மை கெடுமாறு மாற்றுவது தமிழுக்கு ஊறு செய்வதாகும். எனவே மாகாண அரசினர், பிற மொழி எழுத்துக் கலவாத தூய தமிழ் ஆட்சி மொழியாக வழங்க வகை செய்வார்களேன்று நம்புகிறோம்."

இவ்வாறு, 'தமிழின் தனி இயல்பு' என்ற தலைப்பில் 25—5—57 'தமிழ் நாடு' இதழ் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது; மேலும் அத் தலையங்கத்தில் எழுதப்பட்டிருப்பதாவது :—

"தமிழை ஆட்சி மொழியாக்குவதற்காக அரசாங்கம் நியமித்த குழு, 'ஜ', 'ஷ', 'ஸ', 'ஹ' ஆகிய எழுத்துக்களை அப்படியே தொடர்ந்து பயன்படுத்தி வரலாம் என்று சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது. வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையை இது நினைவுபடுத்துகிறது.

"வடமொழி எழுத்துக்களைத் தூய தமிழ் மொழியுடன் சேர்த்து எவ்வாறு பயன்படுத்த இயலும்? ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனி இயல்பு உண்டு; அந்த இயல்பு மாறாதவாறு பாதுகாத்தால்தான் அம்மொழி சிறக்க முடியும்.

"இடைக்கால அறிக்கையில், குழு இவ்வாறு சிபாரிசு செய்திருப்பது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உதவுவதாக இல்லை. 'ஜ', 'ஷ', 'ஸ', 'ஹ' ஆகிய எழுத்துக்கள் தமிழ் மொழிக்கு எந்த விதத்தில் அவசியம் என்பது விளங்கவில்லை. தமிழ் மொழியை இத்தகைய வடமொழி உச்சரிப்புக்கள் இல்லாமலேயே நன்கு பயன்படுத்த முடியும்.

"இடத்திற்குத் தக்கவாறு ஓசைப்படும் தனித்தன்மை தமிழுக்குண்டு. தமிழ் மொழியை நன்கு கற்றவர்கள் ஓசை வடிவில் எப்படி வேண்டுமானாலும் உச்சரிக்க முடியும். இதற்கு எழுத்தில் மாற்றம் தேவையில்லை. 'ஜ', 'ஷ', 'ஸ', 'ஹ' போன்ற வடமொழி எழுத்துக்களைப் புகுத்துவதனால், தமிழ் மொழியின் தனித் தன்மை குன்றி, மொழியின் அழகு சிதைந்துவிடும்.

"தமிழ் மொழி தானாக இயங்கும் தனிச் சிறப்புடையது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய செந்தமிழ் மொழி, எந்த மொழியிடமிருந்தும் எழுத்துக்களைக் கடன் வாங்க வேண்டிய நிலையில் இருந்ததில்லை.

"இடைக்காலத்தில் வடமொழியின் செல்வாக்கு அதிகரித்ததன் காரணமாகத் தமிழின் தூய தன்மை குறைந்து பிறமொழிக் கலப்பு அதிகமாகிவிட்டது. ஆனால் இன்று, தமிழகத்தில் தாய்மொழிப் பற்று அதிகமாகி வருவதைக் காண்கிறோம். அரசியல் கட்சிகள் பல தமிழ்மொழி வளர்ச்சியில் கவனத்தைத்திருப்பியிருக்கின்றன. நல்ல தமிழில் பேசி, எழுதுபவர்களை நாடு மதிக்கிறது. காங்கிரசு ஆட்சியாளர்கள்கூட, தேர்தல் சமயத்தில் தமிழைப் படிப்படியாக ஆட்சி மொழியாக்குவதாகக் கூறினர். திடீரென்று எல்லோருக்கும் இவ்வாறு தமிழ் மொழியின்மீது என்ன பக்தி வந்தது? நாட்டின் சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுதலே இதற்குக் காரணம்.

"தமிழகத்தில் 'தமிழ் வாழ்க' என்ற குரல் எங்கு பார்த்தாலும் ஒலிக்கத் தொடங்கியது. மொழியின்மூலம்தான் ஒரு நாட்டின் பண்பாடு வளருகிறது. என்பதை மக்கள் உணர்ந்தனர். தற்போது தமிழ்மொழி ஒலிக்கிறது என்றால், இன்பத்தேன் வந்து பாய்வது போல மக்கள் எண்ணுகிறார்கள்.

"தாய் மொழியின் அருமையையும் பெருமையையும் மறந்த தமிழர்களிடம், என்றுமுள தென் தமிழ்மீது மீண்டும் பற்றுதல், அன்புமுதலியன ஏற்பட்டு புத்துணர்ச்சிப் பெருக்குக் கரைபுரண்டு ஓடத் தொடங்கியது. இதைக் கண்டு விழிப்படைந்த பல அரசியல் கட்சிகள்கூட, மொழியை அடிப்படையாக வைத்து முன்னேறின.

இந்நிலையில், தமிழை ஆட்சி மொழியாக்குவதாகக் கூறி, மீண்டும் வடமொழி எழுத்துக்களைப் புகுத்த முற்படுவது கண்டனத்திற்குரியது.

1,20,000 தோட்டத் தொழிலாளருக்கு கூலி உயர்வு

பெங்களூரில் ஒப்பந்தம்

பெங்களூர், மே 26—

காப்பி, தேயிலை, மற்றும் இரப்பர் தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வுதர நிர்வாகிகள் சம்மதித்து, மைசூர் தொழிலாளர் அதிகாரி முன்னர் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளனர்.

இதனால், பழைய மைசூர் மற்றும் குடகு பிரதேசத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் 1,20,000பேருக்கு, சுமார் 40 சதவிகித சம்பள உயர்வு கிடைக்கும் என்று தெரியவருகிறது.

இதுவரை தினக் கூலியாக ரூ. 1 பெற்றுவந்தவர்கள் இனி ரூ. 1·40 பெறுவர் என்றும், ரூ. 1—2—9 பெற்றுவந்தவர்கள் ரூ. 1·50 பெறுவர் என்றும் தெரியவருகிறது.

மேட்டுப்பாளையத்தில் செயற்கைக் கல் தொழிற்சாலை

விரைவில்உற்பத்தியில்ஈடுபடுமாம்

புதுடில்லி, மே 27—

1956-ம் ஆண்டில் கண்ணாடி, கண்ணாடிசாமான்களின் மொத்த உற்பத்தி 1,43,587 டன்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது 1950-ல் இருந்த உற்பத்தியை விட இது 65 சத விகிதம் அதிகமாகும். நான்கு வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் இது நடந்தேறியுள்ளது.

சென்னை மாநிலத்தில் மேட்டுப்பாளையத்திலுள்ள செயற்கைக் கல் தயாரிப்பு தொழிற்சாலை விரைவில் உற்படுத்தியில் ஈடுபடுமாம்.

பொதுத் துறையில் மூக்குக் கண்ணாடி உற்பத்தி தொழிற்சாலை யொன்று ஏற்படுத்துவது பற்றி ரஷ்ய நிபுணர்களை இந்திய அரசாங்கம் கலந்தாலோசித்து வருகிறதாம்.

மொழிப் போராட்டப் பெரும் புயல் பஞ்சாபில் உருவாகிறது?

'பஞ்சாபி' மொழிக்கு எதிராக ஆரிய சமாஜிகள் சல்லடம்

இந்திக்கு எதிராக அகாலிகள் போர்க்குரல்

அமிர்தசரஸ், மே 27—

பஞ்சாப் மாநிலத்தில், மீண்டும் மொழிப் போராட்டப் பெரும் புயல் ஒன்று உருவாகிக்கோண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மாநிலப் புது அமைப்புப் பிரச்சினையின்போது முடிவு செய்யப்பட்டபடி, குர்முகி லிபியில் பஞ்சாபி மொழியே மாநிலத்தின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிர்வாகத்தின் எல்லா கட்டங்களிலும் அமுல் செய்யப்படவேண்டும் என்று கோரி பஞ்சாப் அகாலிகள் 'பஞ்சாப் ரக்ஷதளம்' என்ற ஒரு இயக்கத்தை உருவாக்கியிருக்கின்றனர்.

ஒப்புக்கொள்ளப்பட்ட இந்த பஞ்சாபி மொழிக் கொள்கைக்கு எதிர்ப்புக் காட்டியும், 'இந்தி'க்கு உரிய இடம் கோரியும் ஆரிய சமாஜத்தவர், 'பஞ்சாப் இந்தி ரக்ஷ சமிதி' என்ற ஒன்றைத் துவங்கியுள்ளனர். இந்த ஆரிய சமாஜத்தின் தலைவரும் இதாரும், பஞ்சாப் முதன் மந்திரியிடம் வரும் 30-ந் தேதியன்று இதற்காக ஏழு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் தந்துவிட்டு, அவை ஈடேறும்வரை மறியல் போராட்டமும் நடத்தப்போவதாக அறிவித்திருக்கின்றனர்.

இந்த வேண்டாத முயற்சிக்கு மாநில முதன் மந்திரியும், இன்னும் சிலரும் கண்டனம் தெரிவித்திருப்பதுடன், இவர்கள் போராட்டம் நடத்தினால் அந்த நேரத்தில் அகாலிகள் மிக அமைதியாக இருக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளனராம்.

நிலைமைகள் செல்வதைப் பார்த்தால், மீண்டும் பஞ்சாபில் ஒரு பெரும் புயல் வீசுமெனத் தோன்றுகிறது.

துயிலெழுவராம் - செயல்படுவராம்!

மதுரை, மே 27—

காங்கிரஸ் நிறுவனத்தில் குறைபாடுகள் மலிந்து வருவதையும், ஊழியர்கள் மந்தமாக இருப்பதையும், தேர்தலின்போது மட்டும் சுறுசுறுப்பாக இருப்பதையும் காங்கிரஸ் மேலிட வட்டாரம் உணரத் துவங்கிவிட்டது.

இந்தக் குறைபாடுகளை நீக்க ஒரு திட்டத்தை தயாரித்து வருவதாகத் தெரியவருகிறது.

காங்கிரசை மீண்டும் பலப்படுத்தவும், ஊழியர்களுக்கு உற்சாக மூட்டி செயல்படச் செய்யவும், தமிழ் நாடு காங்கிரஸ் ஒரு திட்டம் கொண்டுவரும் என்று தலைவர் இராசாராம் தெரிவித்துள்ளார்.

திருவில்லிப்புத்தூரில் மே தின விழா; மாபெரும் ஊர்வலம்

20 இடங்களில் கழகக் கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டன

என். வி. நடராசன் கலந்துகொண்டார்

திருவில்லிப்புத்தூர் தி. மு. கழகச் சார்பில் 19—5—57-ல், மே தின விழா சிறப்புற நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்துகொள்ள துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், காலை 11 மணிக்கு வந்து சேர்ந்தார்.

இரயிலடியில் கழகச் செயலாளர் மா. குருசாமி அவர்களும், மற்றும் கழக நிர்வாகிகளும், நெசவுத் தொழிலாளர்களும் திரளாகச் சென்று வரவேற்றனர்.

ஊர்வலம் — கொடியேற்று விழா

மாலை 3-30 மணிக்கு ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களும், நெசவாளர்களும், பொதுமக்களும் சூழ சிலம்ப விளையாட்டுகளுடன் நகரின் முக்கிய பகுதிகளில் கழக அலுவலகத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலம் பொதுக்கூட்ட மேடையைச் சேர்ந்தது.

ஊர்வலத்தின்போது நகரின் பல பாகங்களில் 20 இடங்களில் துணைப் பொதுச்செயலாளரால் கழகக் கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டன. ஆங்காங்கு வாண வேடிக்கைகளும் நடந்தன. இவ்வூர்வலத்தில் தாய்மார்களும் கலந்துகொண்டனர்.

வழிநெடுக மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் சார்பு மன்றங்களாலும், கிளைக் கழகங்களாலும் அணிவிக்கப்பட்டன. சிறுவர்களுக்கு இனிப்பும் வழங்கப்பட்டது.

பொதுக்கூட்டம்

இரவு 7 மணிக்கு, ஆண்டாள் கோயில் முன்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். வட்டக் குழு செயலாளர் தோழர் சு. இராமதாசு தலைமை வகித்தார். துவக்கத்தில் நகரச் செயலாளர் மா. குருசாமி, செல்லையா ஆகியோர் பேசினர்.

காங்கிரசார் இராஜிநாமா செய்வார்களா?

அடுத்து, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் மே தின விழாவின் அடிப்படைக் கொள்கையை விவரித்தும், அதன் வெற்றிக்காக தி. மு. கழகம் ஆற்றிவரும் பணியினை விளக்கியும் பேசினர்.

மேலும் அவர் பேசுகையில், டில்லி ஆட்சிபீடத்தினர் விதித்துள்ள வரிக் கொடுமைகளை புள்ளிவிவரங்களுடன் விவரித்துக் கண்டித்தார்.

"நேரு சர்க்காரும், பொதுவாகக் காங்கிரசும் இந்த வரியின் மூலம் மக்களை பெரும்மோசடிக்கு ஆளாக்கி யிருக்கிறார்கள்; தேர்தல் காலத்தில் இவ்வாறு வரியை உயர்த்துவோம் என்று சொல்லி ஓட்டுக் கேட்டிருந்தால் இவர்களை நாணயமானவர்கள் என்று அனைவரும் பாராட்டி யிருப்பார்கள்; ஆனல், அப்போது ஏதேதோ பேசி, ஓட்டுக்களை விலைக்கு வாங்குவதுபோலச் செய்துவிட்டு, தேர்தல் முடிந்ததும் இவ்விதக் கொடுமைகளை மேலும் மேலும் புரிவதை மக்கள் இனியும் அனுமதிக்க மாட்டார்கள்; தி. மு. கழகம் இந்த வரிக்கொடுமையை வன்மையாகக் கண்டிப்பதுடன் அதனை வாபஸ் பெறுமாறு அரசியலாரை எச்சரிக்கிறது; அவர்களுக்கு ஓரளவாவது ஜனநாயக பண்பிருந்தால் சட்டசபையிலிருந்து இராஜிநாமா செய்துவிட்டு புதிய வரிகளை பிரச்சினையாக வைத்துத் தேர்தலுக்கு நிற்கட்டும் என்று அறைகூவல் விடுகிறோம்" என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் காங்கிரஸ் ஆட்சியால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ள விவரங்களையும் எடுத்துக் கூறினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் முடிவுற்றது.

கைத்தறி நெசவாளர் அறிவு வளர்ச்சி மன்றத்தாரால் துணைப் பொதுச் செயலாளருக்கு வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்பட்டதுடன் ஏராளமான சார்பு மன்றங்கள், கழகக் கிளைகள், நெசவாளர்கள் ஆகியோரால் கைத்தறித் துண்டுகளும் மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன; கழக ஆதரவாளர்கள் சிலர் அன்பளிப்பு வழங்கினர்.

இம் மேதின விழா, நகரில் மிகுந்த உற்சாகத்தையும், கழகக் கொள்கையின்மீது மக்களுக்குப் புதியதோர் ஆர்வத்தையும் உண்டாக்கக்கூடிய வகையில் நடந்தேறியது.

இலுப்பக்குடி தி. மு. க. 3-வது ஆண்டு விழா

துணைப் பொதுச்செயலாளர் கலந்துகொண்டார்

பெரம்பலூர் வட்டம் இலுப்பக்குடி தி. மு. கழக மூன்றாவது ஆண்டு விழா 17—5—57 மாலை 6 மணிக்கு பெருமாள் கோவில் திடலில் கே. வி. கே. சாமி பந்தலில் நடைபெற்றது. ஏராளமான கிராம மக்கள் திரண்டிருந்தனர்.

மாலை 4 மணிக்கு கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலம் ஒன்று மேளவாத்தியங்களுடன் புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாக கூட்டமேடையை வந்தடைந்தது; வழியில் பல இடங்களில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொடிகளையேற்றிவைத்தார்.

மாலை 6-30 மணிக்கு ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் தோழர் எம். புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். வடிவேல், பி. ஆர். ரெத்தினசாமி, அரு. ஆதிமூலம், ஆர். முத்துசாமி, இரா. ஆதிமூலம், ஜே. எஸ். இராசு ஆகியோர் பேசினர்.

இறுதியாக என். வி. நடராசன் அவர்கள் தற்கால அரசியல் நிலையை விளக்கியும், கழகத்தின் சிறந்த பணியினை விவரித்தும், தாய்மார்களும், பாட்டாளி மக்களும் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேருமாறு வேண்டியும் நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

கிளைக் கழகங்களும், பல்வேறு மன்றங்களும் கைத்தறி ஆடைகளை அணிவித்ததுடன் அன்பளிப்பும் வழங்கினர்.

இரவு 11 மணிக்கு கழகத் தோழர்களால் 'நல்ல தீர்ப்பு' என்ற பிரசார நாடகமும் நடைபெற்றது.

களத்தூரில் தி. மு. க. துவக்க விழா

பெரம்பலூர் வட்டம் வி. களத்தூர் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் 18-5-57 இரவு 7 மணிக்கு ஆற்றுத் திடலில் நடைபெற்றது. லப்பைக்குடிக்காடு தோழர் அமராவதி தலைமை வகித்தார். தோழர்கள் அரு. ஆதிமூலம், பி. ஆர். இரத்தினசாமி, ஜே. எஸ். இராசு, வசிட்டபுரம் நாராயணன் ஆகியோர் பேசியபின், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கிளைக் கழகத்தைத் துவக்கிவைத்துச் சொற்பொழிவாற்றினர்.

கிளைக் கழகங்களாலும், ஆதரவாளர்களாலும் கைத்தறி ஆடைகள் வழங்கப்பட்டன. ஏராளமான கிராம மக்கள் திரண்டிருந்து சிறப்பித்தனர்.

தமிழகத்தில் கல்வி வளர்ச்சி

சர்க்காரின் முயற்சிகள் பற்றி ஒரு தகவல்

சென்னை, மே 25—

சென்னை மாநிலத்தில் 500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகை உள்ள கிராமங்கள் 13,703 உள்ளன; அவற்றில் 13,387 கிராமங்களில் 1955—56-ம் ஆண்டு இறுதிக்குள் ஒன்று அல்லது அதிகப்படியான பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளனவாம்.

துவக்க நிலைப் பள்ளி முந்திய ஆண்டிலிருந்து 1,639 அதிகரித்து 27,146 - ஆக இருந்தது. மாணவர்கள் தொகை 2,01,982 அதிகரித்து 33,95,687-ஆக இருந்தது.

5,500 ஆசிரியர்கள் ஆதாரக் கல்வி பயிற்சி பெற்றார்கள்; இதனல் பல துவக்க நிலைப் பள்ளிகளை ஆதாரக் கல்விப் பள்ளிகளாக மாற்றப் பெரும் வசதி ஏற்பட்டது.

உயர்நிலைப் பள்ளித் தொகை 41 அதிகரித்து 1,072 ஆக இருந்தது. மாணவர் தொகை 47,319 அதிகரித்து 5,56,324 ஆக இருந்தது.

ஆண்டு வருமானம் ரூ. 1,200-க்கு அதிகமாகாதவர்களின் குழந்தைகளுக்கு இவ்வாண்டு முதல் மூன்றாவது படிவம் வரை சம்பள சலுகை கொடுக்கப்பட்டது. இதன் மூலம் பள்ளி நிர்வாகத்தினருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை அரசாங்கம் ஈடுசெய்தது.

இவ்வாண்டில் ஆண்களுக்கு 45; பெண்களுக்கு 18-ஆக 63 - கல்லூரிகள் இருந்தன.

சாதாரண ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தொகையில் 8 குறைந்து 84 ஆக இருந்தது; ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளித் தொகை 34 அதிகரித்து 81 ஆக இருந்தது; 5 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் திறக்கப்பட்டன. அவற்றில் 3 - அரசாங்கக் கல்லூரிகள்.

ஜனநாயக வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு!

'மக்களுக்குத் தொண்டு செய்வதே மகேசன் தொண்டு'

இளைஞர் கழக ஆண்டு விழாவில் சென்னை பிரதம மாகாண நீதிபதி

"மாணவர்களுக்கு அரசியலில் விஷயங்களில் அதிகமாகத் தொடர்பு இருக்கக் கூடாது. ஆனல் அதற்காக முழுதும் ஒன்றும் தெரிந்துகொள்ளாமல் இருக்கக்கூடாது; நாட்டிலுள்ள அரசியல் நிலைகளைத் தெரிந்திருத்தல் வேண்டும்.

"பொது கழகங்களில் அரசியல் கட்சிகளில் ஈடுபாடுள்ளவர்கள் இருக்கலாம்; ஆனல், அப்பொதுக் கழகங்களை அரசியல் கட்சிகளுக்கு ஈடுபடுத்தக் கூடாது.

"இளைஞர்கள் சமூக சேவையில் ஈடுபட வேண்டும்; அதிகமாக ஈடுபட வேண்டும்.

"100-க்கு 80 பேர் பக்தி கொண்டவர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனல், உண்மையில் அப்படி இல்லையென்று கருதுகிறேன். மக்களுக்காற்றும் தொண்டு—சமூகத்திற்கு செய்யும் சேவை இவைகள்தான் கடவுள் சேவையும்—கடவுள் தொண்டுமாகும்.

"நாட்டின் முன்னேற்றம் இளைஞர்கள் கையில்தான் இருக்கிறது. நமது நாட்டில் ஜனநாயகம் குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. அது வளர இளைஞர்கள் பாடுபட வேண்டும்.

—என்று, சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் அய்யாசாமி(செட்டியார்) அவர்கள், 25—5—57 அன்று நடைபெற்ற சூளை நகர இளைஞர் கழக 24-ம் ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

★

நிகழ்ச்சிகள்:

25—5—57 மாலை 6½ மணிக்கு, சென்னை—சூளை நகர இளைஞர் கழகத்தின் 24-ம் ஆண்டு விழா, சூளை-மாணிக்கஞ்செட்டித் தெருவில் சென்னை நகரப் பிரதம நீதிபதி திரு. எஸ். ஏ. ஐயாசாமி (செட்டியார்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவர் தனது தலைமையுரையில், நகர இளைஞர் கழகத்தின் 24 ஆண்டு தொண்டினைப் பாராட்டியும், இனியும் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு விரிவுரையாற்றினர்.

பின்னர், நகர உதவி ஆணையாளர் என். சங்கரன் அவர்கள், சென்னை நகரத்தைப் பற்றி மற்ற மாநிலங்களிலுள்ள நகரப் பெரியோர்கள் பாராட்டுவதை எடுத்துக்காட்டி, இளைஞர் கழகத்துக்குப் பாராட்டு தெரிவித்தார்.

இறுதியாகப் பேசிய தோழர் இரா. செழியன் அவர்கள் ஜனநாயகத்தைப் பற்றி சிறந்த ஓர் நல்லுரையாற்றினர்.

தலைவர் முடிவுரையுடன் விழா இனிது முடிவுற்றது.

கூட்டம் தொடங்குமுன், கழகச் செயலாளர் தோழர் இரா. சக்கரவர்த்தி ஆண்டறிக்கை வாசித்தார்.

மாஸ்கோ செல்ல விழையும் கலைஞர்கள்

"மாஸ்கோ நகரத்தில், இவ்வாண்டு சூலை திங்கள் 28-ம் நாள் முதல் ஆகஸ்ட் 11-ம் நாள் வரை நடைபெறவிருக்கும் 'உலக இளைஞர் விழா'வை ஒட்டிநடைபெறும் 'உலகத் திரைப்பட விழா'வில் பங்குகொள்ள செல்லவிருக்கும் இந்தியத் திரைப்படத் தூதுக்குழுவில் செல்ல, சில நடிக - நடிகையரைத் தேர்ந்தெடுத்து அனுப்பும்படி இந்தியப் பேரரசு செய்தி ஒலிபரப்பு துறையிலிருந்து தென்னிந்திய படவணிக நிறுவனம் மூலம் தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு கடிதம் வந்துள்ளது. எனவே, மேற்படி தூதுக்குழுவில் கலந்து, மாஸ்கோ செல்ல விரும்பும் நடிக - நடிகையர்கள் மே திங்கள் 31-ம் நாளுக்குள், நடிகர் சங்க செயலாளருக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அப்படி மாஸ்கோ செல்வோர், மாஸ்கோ சென்று வர ஏற்படும் பிரயாணச் செலவை மட்டும், தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்"

—என்று, தென்னிந்திய நடிகர் சங்க பொதுச்செயலாளர்கள் அறிவிக்கிறார்கள்.

பதை பதைக்கத் தட்டிப் பறிக்கும் வரிப் பணம்!

ரூ. 10 கோடி மேலும் பாழடிக்க முடிவு

இலட்சக்கணக்கில் 'அம்பர் இராட்டை' உற்பத்தியாம்!

புதுடில்லி, மே 26—

ஏழை—எளியோரின் வயிற்றிலும் வாயிலும் அடித்துப் பிடுங்கும் வரிப்பணத்தில், இந்த 1957-58ம் ஆண்டிலும், ரூ. 10 கோடி வரை 'அம்பர் சர்க்கா' அபிவிருத்தி என்ற ஒரு ஆகாத திட்டத்திற்காக டெல்லி சர்க்கார் பாழடிக்க முடிவு செய்திருக்கின்றனராம்.

இந்த ஆண்டில், புதிதாக ஒரு இலட்சத்து எண்பதாயிரம் 'அம்பர் சர்க்காக்கள்' உற்பத்தி செய்ய நோக்கமாம்! இந்த நோக்கத்தின் ஒரு பகுதியை நிறைவேற்றுவதற்கே பத்து கோடி ரூபாய் இந்த ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்! உடனடியாக, ரூ. 2 கோடி இப்போதே கதர் கிராமத் தொழில் கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாம்.

1956-57ம் ஆண்டில் 75,000 'அம்பர் சர்க்காக்கள் வேலை செய்யத் துவங்கியுள்ளனவாம். இப்போது, 1957—58-ம் ஆண்டில் ஒன்றரை லட்சம் சர்க்காக்கள் நூற்புப் பயிற்சி பெற்றவர்களுக்கும், 30,000 சர்க்காக்கள் மேலும் பலருக்கு பயிற்சி அளிப்பதற்கும் உற்பத்தி செய்யப்படுமாம்.

1957-58ம் ஆண்டில் ஆறரைக் கோடி கெசம் நூல் இந்தச் சர்க்காமூலம் நெய்தாக வேண்டும் என விதிக்கப்பட்டிருக்கிறதாம்!

சென்ற ஆண்டு 46 ஆயிரம் அம்பர் சர்க்காககள் மூலம், ஏழு இலட்சம் பவுண்டு நூல், உற்பத்தி செய்யடபட்டது என்றும், அம்பர் நூல் கொண்டு 15,30,000 கெசம் துணி நெய்யப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

சூரத், மே 26—

நந்தேரில் உள்ள 'சர்வ தேசிய விகாஸ் மண்டல்' என்ற, சமூக சங்கம் மக்களுக்கு தேவைப்படாத கழிவுப் பொருள்களைச் சேகரித்து அதனை விற்பனை செய்ததின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூ. 7,000-த்தில் ஒரு பெண்கள் பள்ளியைக் கட்டியுள்ளனர்.

பி. எஸ். முத்து—சரோசா வாழ்க்கை ஒப்பந்தம்

17—5—57 காலை 7 மணியளவில் புத்தூர் தோழர் பி. எஸ். முத்து (ரெட்டி) தோழியர் சரோசா வாழ்க்கை ஒப்பந்தவிழா திரு. புலவர் வி. சி. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது; அதுபோது தோழர் டி. கே. சினிவாசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

நன்றி

"தோழியர் சரோசாவை வாழ்க்கை துணைவியாக ஏற்றுக்கொண்டதையொட்டி வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தோழர் பி. எஸ். முத்து (ரெட்டி) அறிவிக்கிறார்.

இன்னும் தயாரிக்கப்படவில்லை!

புதுடில்லி, மே 25—

கிராமந்திர குடியிருப்பு வசதி ஏற்பாட்டிற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் ரூ. 10 கோடி இன்னும் மாநிலங்களுக்குத் ஒதுக்கித் தரப்படவில்லை என்றும், அதற்கான திட்டம் இன்னும் இறுதியாகத் தயாரிக்கப்படவில்லை என்பதுதான் அதற்குக் காரணம் என்றும் மக்கள் சபையில் கூறப்பட்டிருக்கிறது.

மதுரையில் மீண்டும் கழகத் தோழர்கள் வெட்டப்பட்டனர்

தாக்குதலைத் தூண்டியதாகக் கம்யூனிஸ்டுத் தலைவர் கைது

படுகாயப்பட்ட மூவர் நிலை கவலைக்கிடம்

மதுரை, மே 28—

மதுரை செல்லூரில் உள்ள கழகத் தோழர்கள் நடத்தும் 'பகுத்தறிவுப் பாசறைப் படிப்பக'த்தில் நேற்று பகல் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த தோழர்களை, இருவர், படிப்பகத்தினுள் புகுந்து அரிவாளால் தாக்கி வெட்டி யிருக்கின்றனர்.

படிப்பகத்திற்குள்ளிருந்த நால்வரும் வெளியிலிருந்த மூவரும் படுகாயப்பட்டிருக்கின்றனர்.

வெள்ளியம்பலம், கணேசன், மணி என்ற மூன்று தோழர்களும் பலத்த காயங்களுடன், மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டிருக்கின்றனர்.

சுந்தரராஜன், பேயத் தேவர், மாமூனு, கிருஷ்ணன் ஆகிய நால்வரும், காயங்களுக்காக மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கின்றனர்.

மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளவர்களின் நிலை கவலைக் கிடமாக இருப்பதாகத் தெரிகிறது.

இந்த தாக்குதலை நடத்தி கழகத் தோழர்களைக் கொலை செய்ய முயன்றவர்கள் என்று கூறப் படும் சின்னத் தேவர் என்பவரையும், மற்றொருவரையும் போலீசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சின்னத் தேவர் தந்த தகவலின் பேரில், நகர கம்யூனிஸ்டு தலைவருள் முக்கியமானவரும் கவுன்சிலருமான கருப்பையா என்பவர் நேற்று மாலை போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

செல்லூர் முழுவதும் போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடாகி யிருக்கிறது.

நகரில் தொடர்ந்து கழகத் தோழர்கள் பலர், இதுபோல கம்யூனிஸ்டுகளால் தாக்கப் பட்டிருந்தும், போலீசார் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லை என்ற அதிருப்தி நகர மக்களிடை நிலவி வருகிறது.

இத்தனை சம்பவங்களுக்குப் பிறகும், கழகத் தோழர்கள் ஆத்திரங்கொண்டு விடாமல், அவர்களை அமைதியாக இருக்குமாறு செய்வது, மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்களின் பெரும்பொறுப்பாகி யிருக்கிறது. தோழர்களை, ஆத்திரங் கொண்டு விடாமல் அவர்தான் பார்த்து வருகிறார்.

கைதுசெய்யப்பட்டுள்ள சின்ன தேவர் என்பவர், தன்னையும் இன்னொருவரையும் இந்தத் தாக்குதலுக்குத் தயாரித்தவர் கம்யூனிஸ்டு தலைவரான கருப்பையாதான்என்று போலீசாரிடம் கூறி யிருப்பதாகவும் தெரிய வருகிறது.

29—5—57 அன்று அண்ணா நிகழ்ச்சிகள் :

★

மாலை 5-00 மணி :	சேருகுடி தி. மு. கழகத் துவக்க விழா
,, 6-30 ,,	தாத்தையங் கார்பேட்டை கழகபொதுக் கூட்டம்
இரவு 8-30 ,,	மகாதேவி தி.மு. கழகத் துவக்க விழா
,, 11-00 ,,	மனமேடு தி.மு. கழகப் பொதுக் கூட்டம்

★★★★★★★★★★★★★★★★★★

'ஹோம்லண்ட்'

2—6—57 ஞாயிறன்று வெளிவரவிருந்த 'ஹோம்லண்ட்' என்ற ஆங்கில இதழ் அன்று சில தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களால் வெளியிட இயலாமலிருக்கிறது.

9—6—57 ஞாயிறு முதல் 'ஹோம்லண்ட்' இதழ் தவறாமல் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி :
'ஹோம்லண்ட்'
காஞ்சீபுரம்

★★★★★★★★★★★★★★★★★★

காந்தீய சீடர்களின் போலி வேடம்

மக்கள் சபையில் அமைச்சர் சரடு

சென்னை, மே 27—

தனி நாடு கோரி நாகர்கள் கிளர்ச்சி செய்துவருவதும், அவர்கள் சுதந்திர வேட்கையை அடக்க இந்தியப் பேரரசு உடும்புப் பிடியாக தீவிர நடவடிக்கைகள் எடுத்துவருவதும் அறிந்த ஒன்றாகும்.

அடிக்க அடிக்க உயரும் பந்தைப்போல, ஒடுக்க ஒடுக்க நாகர் போராட்டம் வலுவடைந்துவருவதை வெளியாகியுள்ள இரு செய்திகளைக்கொண்டே அறியலாம்.

சென்னையில் உள்ள மலபார் விசேடப் போலீஸ் படையைச் சேர்ந்த 1,000 பேர் விசேட இரயில் மூலம் அசாம் பகுதிக்கு மத்திய அரசின் வேண்டுகோளின் படி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும், இவர்கள் நாகர் சுதந்திரப் போராட்டத்தை ஒடுக்க இராணுவத்திற்கு உதவியாகப் பணிபுரிவர் என்றும் ஒரு செய்தி வெளியிடப் பட்டுள்ளதிலிருந்தே நாகர் கிளர்ச்சி எந்த அளவிற்குப் பலம் பெற்றுவருகிறது என்பதையும், இந்தியப் பேரரசு எவ்வளவு தீவிரமாக அந்தச் சுதந்திர போராட்டத்தை ஒடுக்க முயன்றுவருகிறது என்பதையும் ஒருவாறு ஊகிக்கலாம்.

ஆனால், மக்கள் சபையில் அயல்நாட்டிலாகா உதவி அமைச்சர் இலட்சுமி மேனன், 'நாகர்கள் கிளர்ச்சி கட்டுக்கடங்கிவிட்டது' என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த இரு செய்திகளும் இன்றையத் தினசரிகளில் வெளியாகியுள்ளன !

தலைநகரில் புது வரிகளுக்கு எதிர்ப்பு

பாராளுமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, மே 27—

புதுவரிகளை எதிர்த்து நாடெங்கும் கண்டனங்களும், எதிர்ப்புகளும், ஆர்ப்பாட்டங்களும்பெருகி வருகின்றன.

இந்தியத் தலைநகரிலும் புதிய வரிகளுக்கு எதிர்ப்பு வலுப்பெற்று வருகிறது.

இந்தியப் பாராளு மன்றத்தின் முன், நேற்று புதுவரிகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

மாநில மக்கள் சங்கம் இந்த எதிர்ப்பில் தீவிர பங்கேற்று நகரில் ஊர்வலமாகச் சென்றும், பாராளு மன்ற உறுப்பினர்களிடம் முறையிட்டும் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் எவரும் இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ள வில்லை என்றும், உபயோகித்தபோதெல்லாம் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தியுள்ளதாகவும் பண்டித நேரு, இந்த மகாசபைத் தலைவரின் புகாருக்கு பதிலளித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சென்னையில்

புது வரிகள் கண்டனப் பொதுக்கூட்டம்

29-5-57 புதன் மாலை 6-மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில்

★

தலைவர் : **அலமேலு அப்பாதுரை**

தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்களும், மற்றும் பலரும் கலந்துகொள்வர்

—திருவல்லிக்கேணி தொகுதி தி. மு. கழகக் கிளைகள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

இலக்கமநாயக்கன்பட்டி :

அர்ச்சுனன் மைதானம்
30—5—57 இரவு 7 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் :
மேடைசிதம்பரனார்
பேசுவோர் :
சி. வேலுசாமி
கே. எஸ். எஸ். பெரியார்
அ. வீராசாமி
ப. இராமசாமி
(மாலை 5 மணிக்கு, பள்ளி மாணவர்களால் போடப்பட்ட பாதையை தோழர் மேடை சிதம்பரனார் திறந்துவைப்பார்.)

★

கண்ணாங்குடி :

30—5—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் : மலையரசன்
கொடியேற்றுபவர் :
இரா. சக்கரவர்த்தி
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
தில்லை-வில்லாளன்
புலவர்-ஆறுமுகம்
இரத்தின-பாலகுருசாமி
பொன்-சொக்கலிங்கம்

இராசிபாளையம் :

(கோவை மாவட்டம்)
30—5—57 மாலை 6 மணிக்கு
தலைவர் :
ம. மணியம்
பேசுவோர் :
கி. பெருமாள்
கோ. நாராயணன்
க. கனலன்
இரா. ப. அய்யாசாமி

★

பத்தமடை :

(நெல்லை மாவட்டம்)
30—5—57 அன்று
தலைவர் : பி. எஸ். இராமையா
பேசுவோர் :
க. அன்பழகன், எம்.எல்.ஏ.
இரத்தினவேல்பாண்டியன்

நகர சிறுவர் சங்கம்

29-7-57 மாலை 6-30 மணிக்கு, சென்னை - சூளை டிமலஸ்ரோடிலுள்ள குமாரசாமி ராஜாபுரத்தில், நகர சிறுவர் சங்கத்தின் சார்பில் 'பெற்றோர்கள் தின' விழாக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, வழக்கறிஞர் பி. பாலகோபால் அவர்களும் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவர். சிறுவர்களின் 'கதம்ப நிகழ்ச்சி'யும் நடைபெறும்.

தாளமுத்து கொலை எதிரொலி :

மற்றொரு பிரபல கம்யூனிஸ்டுத் தலைவர் கைது

இரத்தக் கறை படிந்த ஆயுதம் கைப்பற்றப்பட்டது

தூத்துக்குடி, மே 27—

திராவிட முன்னேற்றக் கழக வீரர் தாளமுத்து படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமாக நகரத்தில் பிரபல கம்யூனிஸ்டுத் தலைவரும், கவுன்சிலரும், சங்கு குளிப்போர் சங்க செயலாளரும், ஹார்வி மில் தொழிலாளர் சங்க உதவித் தலைவரும், 'தினத் தந்தி' நிருபருமான ஜி. சுடலைமுத்து என்பவரை இன்று போலீசார் கைது செய்துள்ளனர்.

மற்றும், நாற்பு ஆலைத் தொழிலாளர்கள் மூவரும் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதுவரை கைது செய்யப்பட்டோர் எண்ணிக்கை 71 ஆகிறது.

தாளமுத்து கொலையில் சம்பந்தப்பட்டவர் என்று கூறி கைது செய்யப்பட்டுள்ள செல்லைய நாடார் தந்த தகவலின் பேரில், இரத்தக் கறை படிந்த ஒரு ஆயுதமும் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

தாளமுத்து கொலைக்கு, கம்யூனிஸ்டுகளான நீதிராசன், சுடலைமுத்து முதலியோர்தான் முக்கிய காரணஸ்தர்கள் என்றும், தாளமுத்து முதலிய கழகத் தோழர்கள்மீது, நீதிராசன் முதலிய கம்யூனிஸ்டுகளுக்குப் பகை உண்டென்றும், நீதிராசனும், கும்பலும் தன்னைத் தாக்க சதி செய்வதாக தாளமுத்து ஏற்கனவே போலீசாரிடம் புகார் செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

முதல் முயற்சி

தாளமுத்துவைப் படுகொலை செய்ய இதற்கு முன்பு ஒருமுறை இதே கம்யூனிஸ்டுகள் முயற்சித்ததாகத் தெரியவருகிறது.

தாளமுத்து கொலை செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பாக, தாளமுத்து கீழூருக்குப் போய்க்கொண்டிருக்கையில், பழைய பஸ் ஸ்டாண்டு அருகே நீதிராசன் முதலிய கம்யூனிஸ்டுகள் ஆயுதங்களுடன் நின்று கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு, உடனே அருகிலிருந்த ஜோதி அரிசி மில்லுக்குச்சென்று போலீசாருக்கு டெலிபோன் செய்ததாகவும், போலீஸ் உதவி கிடைத்த பிறகே மில்லை விட்டு வெளியேறியதாகவும் தெரிய வருகிறது.

தாளமுத்துவுடன் கூடச்செல்கையில், தாக்கப்பட்ட ராசா என்ற தையல்காரர் தந்துள்ள வாக்குமூலத்திலும் அவர், தாளமுத்து குறிப்பிட்ட நீதிராசன், மற்றும் செந்தூர் பாண்டியன், செந்தூரான், இராமனுதன், செல்லையா, அதிரசம் என்ற ராஜ பாண்டியன், அருணாசல பணிக்கர், நடராசன், சேஷய்யா பிரபல கம்யூனிஸ்டு ஊழியர் சேவியர் ஆகியோரும் இருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

முன்பு பலி கொள்ளப்பட்ட தோழர் கே. வி. கே. சாமி கொலை வழக்கில், இப்போது சிக்கியுள்ள அதிரசம் என்பவரும் ஒருவர் என்பது குறிப்பிடதக்கது.

மாவட்ட போலீஸ் அதிகாரி நகரில் முகாம் செய்து, படுகொலைகள் பற்றிய புலன் விசாரணையில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

முகவரி மாற்றம்

எஸ். எஸ். பி. லிங்கம்
13, 5-வது டிரஸ்ட் கிராஸ் ரோடு,
மந்தவெளி பாக்கம்,
சென்னை.

திருமணம்

30—5—57 அன்று இலங்கை தி. மு. கழகத் தோழர் பி. எஸ். ஏ. கனி — தோழியர் சித்தி குரைஷா வாழ்க்கை ஒப்பந்த விழா, கொழும்பு - பீர்சாகிபு தெரு, எண். 61/1 இல்லத்தில் நடைபெறும்; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

புதுவரிகள் கண்டனக் கூட்டம்

28-5-57 இரவு 7-30 மணிக்கு, சென்னை - 36-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், வடக்கு தியாகராய நகர் - இரயில்வே பார்டர் ரோடு 16-ம் எண். கழகப் பணிமனையில், 'புது வரிகள் கண்டனக் கூட்டம்' தோழர் மா. இளங்கோ தலைமையில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.